~047

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING**

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

# GGY 2.21 ELEMENTS OF GEOMORPHOLOGY

ஒவ்வொரு பகுதிகளில் இருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. நேரம் : **03 மணித்தியாலங்கள்**

---

## பகுதி 1 - புவிவெளியுருவவியல்

01. அ. "பிரதேசத்தின் புவிவெளியுருவவியல் தோற்றப்பாடுகள், குறித்த பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளைத் தீர்மானிக்கின்றன" இக்கூற்றினை இலங்கையின் புவிவெளியுருவவியலோடு ஒப்பிட்டு ஆராய்க. (12 புள்ளிகள்)

    ஆ. புவியில் காணப்படும் கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றப்பாட்டை விளக்குக. (08 புள்ளிகள்)

02. அ. சமுத்திர வடிநிலத் தோற்றத்தினை புனையா வரைபடத்தின் துணையோடு விபரிக்குக. (10 புள்ளிகள்)

    ஆ. "காலங்காலமாக கண்டங்களும் சமுத்திரங்களும் விரிவடைகின்றன இதன் காரணமாக புவியின் நிலத்தோற்றங்களும் மாற்றமடைகின்றன" இக்கூற்றில் காணப்படும் உண்மைதன்மையினை ஆதாரபூர்வமாக விளக்குக. (10 புள்ளிகள்)

03. அ. வானிலையாலழிதல் பல நன்மைகளையும் சில தீமைகளையும் புவி மேற்பரப்பில் ஏற்படுத்தி வருகின்றன ஆராய்க. (08 புள்ளிகள்)

    ஆ. வானிலையாலழிதலின் வகைகளை உதாரணங்கள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

    இ. தரைத்தோற்ற உயர வேறுபாடுகளும், சரிவுகளும் வானிலையாலழிதல் செயற்பாட்டில் எத்தகைய பங்களிப்பினை செய்கின்றது என்பதனை விமர்சிக்குக. (06 புள்ளிகள்)

04. அ. மண்சரிவு என்றால் என்ன? (02 புள்ளிகள்)

    ஆ. இலங்கையில் நிலச்சரிவுகள் தொடர்ந்து ஏற்படுவதற்கான காரணங்களை விரிவாகத் தருக. (08 புள்ளிகள்)

    இ. நிலச்சரிவின் வகைகளைக் குறிப்பிட்டு அதில் இரண்டு பற்றி வரைபடத்தின் துணையோடு விளக்குவதோடு அதனைக் தடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக. (10 புள்ளிகள்)

மறுபக்கம் பார்க்க.........

பகுதி -2 சமகாலப் பிரச்சினைகள்

05. அ. 'புவியின் வெப்பச் சமநிலை பாதிப்படைந்து வருகின்றது' இக்கூற்றிற்கான காரணகாரியத் தொடர்புகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

ஆ. வளிமண்டலப் பொதுச்சுற்றோட்டம் பற்றிய கருது கோள்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

06. அ. நீரியல் வட்டத்தில் ஆவியாக்க ஆவியுயிர்ப்பிற்கும் படிவு வீழ்ச்சிக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ. நீரியல் வட்டச் செயன்முறைகளில் இடைமறித்தலினதும் ஊடுருவலிதனதும் முக்கியத்துவத்தை ஆராய்க (08 புள்ளிகள்)

இ. தரைகீழ் நீர் வளத்தின் தரத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளைத் தருக. (04 புள்ளிகள்)

07. அ. கடற்கரையோர நிலத்தோற்றத்தை வரைபடங்களின் துணையோடு முன்வைக்குக. (06 புள்ளிகள்)

ஆ. கரையோர நிலத்தோற்றத்தை உருவாக்கும் காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

இ. கரையோரம் சார்ந்த பிரச்சினைகளை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

ஈ. கரையோர வளம் நாட்டின் பொருளாதார முக்கியத்துவமிக்கது என்ற அடிப்படையில் அதனைப் பாதுகாக்கும் முறையினை விளக்குக. (06 புள்ளிகள்)

08. அ. உலகின் இன்று இயற்கை இடர்கள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன. இதற்கான காரணங்களை ஆராய்க. (08 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் வெள்ள அனர்த்தங்களின் தாக்கம் பற்றியும் அதனைக் குறைத்துக் கொள்வதற்கான முகாமைத்துவ உத்திகள் பற்றியும் ஆராய்க. (12 புள்ளிகள்)